மங்கள வைபவங்களுக்கேற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான பிளவுஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 ஒளி: 244 ஆவணி மீ 30 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 14 (15 : 09 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY

## இந்தியப் படை வெளியேறிய பின்

# தாக்குதல் நடந்தால் முறியடிக்கவே தமிழ் தேசிய இராணுவ அமைப்பு

### உருவாக்கப்படுவதாக கேதீஸ்வரன் தகவல்

கொழும்பு, செப்: 15

இந்திய அமைதிப்படை வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேறிய பின்னர் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அல்லது குழுக்கள் மீதோ இலங்கை அரசோ அல்லது வேறு தமிழ்க் குழுவோ தாக்குதல்கள் எதனையும் தொடுத்தால் நாம் அதனை முறியடிப்போம்;

அதற்காகத் தேசிய தமிழ் இராணுவம் ஒன்று வடக்கு, கிழக்கில் உருவாக்கப்பட்டு வருகிறது;

—இவ்வாறு நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றுகையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் திரு. எல். கேதீஸ்வரன் கூறினார்;

இந்த மாநாட்டில் யாழ் மாவட்ட எம். பிக்களான திரு. கே. பிரேமச்சந்திரன், திரு. கே. யோகசங்கரி ஆகியோரும் பங்குபற்றினர்;

மாநாட்டில் திரு. கேதீஸ்வரன் மேலும் கூறியதாவது:-

தேசிய தமிழ் இராணுவப் படை ஒன்றை உருவாக்குவதற்காக வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

15 - 09 - 1989
ஆவணி 30 வெள்ளிக்கிழமை
நக்ஷத்திரம்: பூரட்டாதி
சுபநேரம்:
06-03 முதல் 07-33 வரை
ராகுகாலம்:
10-33 முதல் 12-03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பூரணை விரதம்

## ஜீ. சி. ஈ. பரீட்சை எப்போது? அதிகாரிகளுக்கே குழப்பம்!

கொழும்பு, செப்: 15

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை, ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை ஆகியன எப்போது நடத்தப்படும் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லமுடியாத நிலையில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது;

கல்வி அமைச்சு வட்டாரங்களின்படி, ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் வரை நடத்தப்பட மாட்டாது;

இதேவேளை இவ்வருட ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் மாதமே நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்; (உ-எ)

## பயிலுநர் ஆசிரியர் பதவி: 35 ஆயிரம் பேர் தெரிவு?

கொழும்பு, செப். 15

பயிலுநர் ஆசிரியர் திட்டத்தின் கீழ் மேலும் 10 ஆயிரம் ஆசிரியர்களை நியமனம் செய்ய அனுமதி வழங்கும்படி கல்விச் சேவை ஆணைக்குழு அரசாங்கத்தைக் கோரியுள்ளது;

இத்திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களை நியமிப்பது என்று அரசு முன்னர் தீர்மானித்திருந்தது தெரிந்ததே;

ஆணைக் குழுவின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் மொத்தமாக நியமிக்கப்படும் ஆசிரியர் எண்ணிக்கை 35 ஆயிரமாக அதிகரிக்கும்; (உ-எ)

## ஆலயக் கரையில் ஆணின் சடலம்

செல்வச்சந்நிதி தேர்த் திருவிழா தினமான நேற்றுக்காலை தொண்டமானாற்றில் ஆணின் சடலமொன்று கரை ஒதுங்கியது.

ஆலயத்தின் கரையோரமாக ஒதுங்கிய சடலம் நேற்று பிற்பகல் 2 மணி வரை கரை எடுக்கப்படாமல் ஆற்றிலேயே முகம் குப்புற இருந்த நிலையில் கிடக்கக் காணப்பட்டது;

சடலத்தில் இருந்து வீசிய துர்நாற்றம் ஆலயச் சூழலில் நின்றவர்கள் மூக்கைப் பொத்துமளவிற்குப் பரவியிருந்தது; (அ-51)

## கொழும்பிலிருந்து வடக்கே 298 தபால் பொதிகள்

வவுனியா, செப் 15

கொழும்பிலிருந்து விசேஷ பஸ் மூலம் செவ்வாய்க்கிழமை மாலை அனுராதபுரத்துக்கு வந்து சேர்ந்த வடபகுதிக்கான 298 தபால்பொதிகள் வவுனியாவுக்கு விசேஷ பஸ் மூலம் கொண்டுவரப்பட்டன;

அதேசமயம் வவுனியாவில் தேங்கிக் கிடந்த 90 தபால் பொதிகள் பஸ் மூலம் செவ்வாய்க்கிழமையே கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன;

வவுனியா பிரதம அஞ்சலதிபர் திரு. எஸ். பொன்னையா மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்;

கொழும்பில் இருந்து வந்த பொதிகளில் யாழ். பகுதிக்கு 142 பொதிகளும், முல்லைத்தீவுக்கு 77 பொதிகளும் புதன் அன்று இ. போ. ச. பஸ்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன; (இ-164)

## சந்நிதித் தேர் காண பெரும் பக்தர் கூட்டம்

தொண்டமானாறு, செப்: 15

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய ரதோற்சவம் நேற்று முற்பகல் பக்தி பூர்வமாக நடந்தேறியது;

வடமராட்சிப் பகுதி இயல்பு நிலையில் இல்லாத போதிலும் இம்முறையும் அடியார்கள் பல்லாயிரக் கணக்கில் குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருந்தனர்;

துலா-பறவைக் காவடிகள் பத்திற்கும் அதிகமானவை ஆலயம் வந்தன; பால்-செடில் காவடிகளும் நூற்றுக் கணக்காக வந்து சேர்ந்தன.

அன்னதான மடங்கள் அதிகமானவை உடைக்கப்பட்டிருந்த நிலையிலும், அன்னதானத்திற்குப் புகழ் பெற்ற சந்நிதியில் இம்முறையும் அடியார்கள் அலைவரும் மடங்களில் அமுதம் புசித்து நிறைவு பெற்றதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது;

15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சித்திரத் தேர் திக்கிரையாக்கப்பட்ட பின், முதன்முறையாக இவ்வருடமே ரதோற்சவம் நடைபெற்றது;

பெண் அடியார்களையே அதிகளவில் எண்ணிக்கையில் காணக் கூடியதாக இருந்தது; இளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒவ்வொரு கட்சியுடனும் தனித்தனி கலந்துரையாடல்

கொழும்பு, செப் 15

அனைத்துக் கட்சிகள் மாநாட்டை ஒட்டிய, கலந்துரையாடலுக்கு ஒதுக்கப்பட்ட தினங்களில், தீர்வு காண சொந்த யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி அரசியல்கட்சிகள் ஒவ்வொன்றும் கோரப்படும்;

தீர்வுகாண யோசனைகள் சமர்ப்பிக்கப்படும்போது குறிப்பிட்ட கட்சியின் சார்பில் எவ்வளவு பிரதிநிதிகளும் கலந்து கொள்ளலாம்,

ஆனால் ஏனைய கட்சிகளும் தலா இரண்டு பிரதிநிதிகளை அச்சமயம் சமுகமளிக்க அனுப்பிவைக்கலாம்;

பின்னர் இடம்பெறும் கலந்துரையாடலில் அவர்களும் யோசனைகளைச் சமர்ப்பித்த கட்சிப் பிரதிநிதிகளுடன் சேர்ந்துகொள்ளலாம்; கலந்துரையாடல்கள் இம்மாதம் 18, 19, 21, 23, 28, 29, 30 அக்டோபர் 3, 5, 6ஆம் திகதிகளில் இடம்பெறும்;

இத்தகவல்களை ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்; (அ-எ)

## இவ்வருடக் கல்வியாண்டு பெப்ரவரி வரை நீடிப்பு?

கொழும்பு, செப் 15

1989 பாடசாலை ஆண்டை அடுத்த வருடம் பெப்ரவரி வரை நீடிப்பது பற்றி கல்வி அமைச்சு தீவிரமாகப் பரிசிலனை செய்து வருகிறது;

இக்காலத்தினுள் பாடத்திட்டத்தின்படி போதனைகளை பூரணப்படுத்துவதற்காகவே இந்த நீடிப்பு என்று சொல்லப்படுகிறது;

பாடசாலை விடுமுறை தினங்களைக் குறைப்பது பற்றியும் அமைச்சு பரிசீலனை செய்து வருகிறது; (அ-எ)

# படை விலகல் உடன்பாடு விரைவில் கைச்சாத்தாகும்!

## ரஞ்சன் வெளியிட்ட தகவல்

கொழும்பு, செப்டம்பர் 15

வடக்கு, கிழக்கிலிருந்து அமைதிப்படையை விலக்குவது தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தனியான உடன்படிக்கை ஒன்று இரண்டொரு தினங்களில் கைச்சாத்திடப்படவிருக்கிறது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரே வடக்கு, கிழக்கில் யுத்தநிறுத்தம் பற்றிய அறிவிப்பு வெளியாகும்,

—இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நேற்று வெளியிட்டார்,

படைவிலகல் தொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் வெளியுறவு அமைச்சின் செயலாளரும் இந்தியாவின் சார்பில் கொழும்பில் உள்ள இந்தியத்துாதரும் கைச்சாத்திடுவர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்;

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பெறுபேறுகள் குறித்து நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தகவல் வெளியிட்டார்;

அப்போது அவர் சொன்னதாவது:-

இலங்கை - இந்திய உடன்பாடு இன்னும் ஓரிரு நாட்களில் வெளியாகும்;

எல்லாத் தரப்பினரையும் திருப்திப்படுத்தும் அளவுக்கு இந்த உத்தேச உடன்பாடு இருக்கலாம் என்று நம்புகின்றேன்;

ராஜீவ் காந்தியும் பிரேமதாஸாவும் பரஸ்பரம் மற்றவர்களுக்கு உள்ள சிரமங்களைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்;

விசுவாசமாக இரு தலைவர்களும் உடன்பாட்டை உருவாக்குவதில் ஈடுபட்டனர்;

இந்திய அமைதிப்படை வாபஸ் தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பெரும்பாலான விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுவிட்டன; ஓரிரு விடயங்களே இன்னும் தீர்க்கப்பட உள்ளன;

பெல்கிரேட்டில் இடம்பெற்ற பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்றன, இந்தப் பேச்

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அதிகாரிகளே குழம்பினால் ...... மாணவரின்ரை பாடு என்னமாதிரி......?

## யுத்த நிறுத்தத்துடன் நிபந்தனைகளும் வரும்!

புதுடில்லி, செப் 15

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கும்போது சில நிபந்தனைகளை விதிப்பது தவிர்க்க முடியாததாகும் என்று இந்தியா நேற்று அறிவித்தது:

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இதனை செய்தியாளரிடம் தெரிவித்தார்;

யுத்த நிறுத்த காலத்தின் போது விதிக்கப்படும் நிபந்தனைகள் மீறப்படும்போது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி சொன்னார்;

அமைதிப்படை விலகல் தொடர்பான கூட்டறிக்கை பற்றி இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (உ-எ)

## இறுதி நேரத்திலும் இழுபறி நிலைமை!

கொழும்பு, செப் 15

அமைதிப்படை விலகல் மற்றும் விடயங்கள் தொடர்பான கூட்டறிக்கை, உடன்பாடு ஆகியவற்றை உருவாக்குவதில் நேற்று இறுதி நேரத்திலும் இழுபறி நிலை நிலவியதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன;

இலங்கை அரசு கடைசி நிமிட யோசனைகள் சிலவற்றை புதுடில்லிக்குத் தெரிவித்துள்ளது என்றும்—

இவை ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருப்பதாகவும் புதுடில்லியில் அரசு அதிகாரிகள் உத்தியோகபற்றற்ற முறையில் தகவல் தெரிவித்தனர்;

அந்த யோசனைகள் பற்றிய விவரங்களை அரசு அதிகாரிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு அமெரிக்காவிலிருந்து நவீன உபகரணங்கள்

யாழ்ப்பாணம், செப்15

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குத் தேவைப்படும் அத்தியாவசிய உபகரணங்கள் சில அமெரிக்காவிலிருந்து கிடைக்க உள்ளன.

இந்த நவீன உபகரணங்களை, அமெரிக்க அரசாங்கமோ அல்லது அங்குள்ள தொண்டர் நிறுவனம் எதுவுமோ அனுப்பிவைக்க இருப்பதாக நினைக்காதீர்கள்!

பலலட்சம் ரூபா பெறுமதியான நவீன வைத்தியத் தொழில்நுட்பக் கருவிகளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரே கப்பலில் அனுப்பி வைத்துள்ளார்;

இப்போது அமெரிக்காவில் பணிபுரியும் அவர் முன்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த பிரபல வைத்திய நிபுணர் ஆவார்;

சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர் இதற்கு முன்னர் லீவில் யாழ்ப்பாணம் வந்திருந்த சமயமும், சத்திர சிகிச்சைப்பிரிவுக்குத் தேவைப்படும் சில இயந்திரங்களை அன்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான உதவியை பிரிட்டன் நிறுத்தியது!

இலங்கைக்கு வழங்கும் நிதி உதவியை பிரிட்டிஷ் அரசு இடைநிறுத்தி வைத்திருப்பதாக பி. பி. சி. நேற்று அறிவித்துள்ளது;

இலங்கையில் தொடர்ந்து வன்செயல்கள் இடம்பெற்று வருவதன் காரணமாக பிரிட்டன் இந்த முடிவை எடுத்திருக்கிறது;

இதனால் இலங்கைக்கு 20 மில்லியன் பவுண் (சுமார் 120 கோடி ரூபா) நிதி உதவியை பிரிட்டிஷ் அரசு நிறுத்தி வைத்துள்ளதை கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் உறுதிப்படுத்தியதாக பி. பி. சி மேலும் தெரிவித்தது; (உ-எ)

## ரூபவாஹினி கலைஞர் கொலை!

கொழும்பு, செப்: 15

ரூபவாஹினி கலைஞரான திருமதி. சகாரியால் கோமஸ் என்பவர் சடலமாக நேற்று கொழும்பு அங்குலானைக் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டார்;

அவர் நேற்று முன்தினம் இரவு தெஹிவளையில் உள்ள அவரது வீட்டில் இருந்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார்;

அவருடன் இதுவரை ரூபவாஹினி கலைஞர்கள் சிலர் இனந்தெரியாதவர்களால் கொல்லப்பட்டனர்; (இ-எ)

# கட்டைபறிச்சானில் மோதல்!

## 15 பேர் பலி! 10 பேர் காயமுற்றனர்!!!

யாழ்ப்பாணம், செப், 15

நேற்று முன்தினம் காலையில் மூதூர் கட்டைபறிச்சான் விபுலானந்த மாவித்தியாலயப் பகுதியில் பெரும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பதினைந்து பொதுமக்கள் வரை உயிரிழந்ததாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன;

இந்தச் சம்பவத்தில் பத்துப் பேர்வரை படுகாயமடைந்தனர்; அவர்களில் ஐந்துபேர் விபுலானந்த மகாவித்தியாலய மாணவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது;

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஒன்பதுபேரின் பெயர் விபரங்கள் நேற்றிரவு கிடைத்தன; அவை வருமாறு:

★ செல்வராசா தங்கம் (65 வயது)
★ மங்கலி பரஞ்சோதி (80 வயது)
★ சிற்றம்பலம் சுந்தரராஜா (86 வயது)
★ பாலசுந்தரம் நவிவி (9 வயது)
★ வீரக்குட்டி தெய்வானைப்பிள்ளை (60 வயது)
★ பாக்கியராசா மணி (45 வயது)
★ இராசரத்தினம் கீதா (17 வயது)
★ விக்கம் பிரதீபன் (6 வயது)

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

குபாட்டா லாண்மாஸ்ரர் பெட்டி, கலப்பை, டியர் பொக்ஸ் ஆகியன விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல: 1 யாழ்வீதி, யாழ்ப்பாணம். (2164)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books), அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல:03 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1551)

### உடன் விற்பனைக்கு

Dason 3½ மாத பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு: முகவரி: சுந்தரகுமார், மருத்துவப் பிரதிநிதி, 81, மானிப்பாய் றோட், தாவடி. (2350)

தொழிற்சாலை அமைப்பதற்கு உகந்த வெல்டிங் Driller மற்றும் எல்லாப் பொருட்களும் விற்பனைக்குண்டு பார்வையிடும் நேரம் காலை 10 முதல் 12மணி வரை தொடர்பு 417, நாவலர் றோட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2347)

### சணல் விதை விற்பனைக்கு

நல்ல இன சணல் விதை விற்பனைக்கு உண்டு தொடர்பு: க. விஜயகுமார், கும்பழாவளை மேற்கு, அளவெட்டி வடக்கு. (2172)

### இறைச்சிக்கோழி

புரொயிலர் இறைச்சிக்கோழி சேவல். முட்டை இட்டு இளைத்த கோழி விற்பனைக்கு உண்டு சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (2088)

### புரொயிலர் குஞ்சு விநியோகம்

Christombu Farm Birahha Farm புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும் விலை குறைக்கப்பட்டுள்ளது. முன் கூட்டியே பதிவு செய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம்: சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். (3609)

### மணமகள் தேவை

இந்து உயர்குல வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது மும்மொழியும் கற்ற மது, புகைத்தல் அற்ற சிவந்த மேனி நற்குணம் உயர்பதவியில் இருக்கும் மணமகனுக்கு அதே குடும்பத்தைச் சேர்ந்த அழகிய படித்த நற்குணமுள்ள 25 - 28 வயதுக்குட்பட்ட மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் முதலிய விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். 605, C/o உதயன், யாழ்ப்பாணம். (2345)

### ரேனியோ

ரேனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா சந்தி) (சி/ 2359)

### காணவில்லை

எனது மூக்குக்கண்ணாடி நவீன சந்தைப்பகுதி (யாழ்ப்பாணம்) தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும் லூர்து அன்ரனி ஆசிரியர் யாழ்/ சென்றி அரசர் கல்லூரி இளவாலை. (1944)

### TOEFL

Oct 28 Nob 18 Jan 13 Mar 10 May 12 பரீட்சைகளுக்கு மீட்டல் வகுப்பு நடைபெறுகின்றன தொடர்பு: S. B. IYAR 12 வைமன் வீதி. (2171)

## திருகோணமலைவைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப் 15 திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிராமப்புற வைத்தியசாலைகளில் வெகுவற்றில் முற்றாக எந்தவிதமான மருந்துகளும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது

கொழும்பில் அரச மருத்துவ களஞ்சியத்தில் மருந்து வழங்குவதற்கு ஊழியர்கள் அதிகாரிகள் இல்லாததன் காரணமாகவே இந்த மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துக் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

கிராமபுற வைத்தியசாலைகளில் முற்றாக மருந்து இல்லாததன் காரணமாக அவர்கள் நகர வைத்தியசாலைகளுக்கு வரவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## செயற்குழு கூட்டம்

பருத்தித்துறை, செப். 15 யாழ்-மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன செயற்குழுக் கூட்டம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு சம்மேளனத் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் சம்மேளனச் செயலகத்தில் நடைபெறும். சம்மேளனச் செயலகம் தற்போது இல. 23 சிவன்பண்ணை வீதியில் அமைந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (118)

## ஆங்கில அறிவைப் பெருக்க ஆசிரியருக்கு விசேட வகுப்பு

ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்களை தேசிய ஆங்கிலக் கல்வி நிறுவனம் நடத்தவுள்ளது:

இன்று வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் திங்கட்கிழமையும் யாழ் பிரதிக்கல்விப்பணிப்பாளர் பணிமனையில் இதற்கான நேர்முகப்பரீட்சை ஆங்கிலக் கல்வி அதிகாரி திரு. தியாகராசாவினால் நடத்தப்படவுள்ளது.

ஆங்கிலம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இவ்வகுப்புக்களில் பங்கு கொள்ளலாம் இது தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை கொத்தணி அதிபர்களிடமும் நேர்முகப்பரீட்சை நடக்கும் நாட்களில் அவ்விடத்திலும் பெற்றுக் கொண்டு தகுதியுள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பம் கொடுத்தும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றலாம் எனக்கல்வி அதிகாரி திரு: தியாகராசா தெரிவித்தார். (க-120)

## பலாலிப் பகுதிப் பெற்றோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்

### கொத்தணி அதிபர் உரை

பலாலி, செப். 15 பாடசாலைக் காணியை இராணுவம் விமான நிலைய விஸ்தரிப்புக்காகச் சுவீகரித்த வேளையில் பாடசாலை மூடப்பட்டு பிள்ளைகள் வேறுபாடசாலைகளுக்கு அனுப்பப்பட விருந்த வேளையில் பாடசாலையை மூடவிடாது தற்காலிக இடத்தில் கடந்த ஆறு வருடகாலமாக நடத்தி தற்போது பாடசாலைக்கென சொந்தமாக காணியையும் வாங்கி பலாலி பெற்றோர் வடபகுதியின் ஏனைய பெற்றோர்களுக்கு முன்மாதிரியானவர்கள் ஆவர்.

பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் புதியமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு உரையாற்றிய காங்கேசன்துறைக் கொத்தணி அதிபர் திரு க. இராசதுரை இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திரு: எஸ் கணேசமூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு. இ. பொன்னம்பலமும் உரையாற்றினர். (க-119)

## விதை சேகரிப்பு போட்டி

பருத்தித்துறை, செப். 15 பயன்தரும் வேப்பம்விதை, இலுப்பம் விதை ஆகியவற்றை சேகரிக்கும் போட்டியை யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள இந்து இளைஞர் மன்றங்களும் இணைந்து நடாத்தவுள்ளன:

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மன்றங்கள் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை, நல்லை ஆதீனம், நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றன. (க-118)

### விலங்கியல்

R. ஈசன் B.Sc. (Cey)

89 A/L

★ துரித மீட்டல் வினாவிடை

Mons to Fri:
7-30 — 8-30 a. m

★ Model Questions Paper - 89

Sat. / Sun
10-30 — 11-30 a. m.

Personal Classes

B.M.C. முன்லேன்
JAFFNA.

(C/3681)

## பண்டிதமணி நினைவு விழா நன்றி நவிலல்

20-08-1989 ஞாயிறு முற்பகல் யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் இடம் பெற்ற பண்டிதமணி நினைவு விழா சிறப்பாக நடைபெறப் பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்:

பண்டிதமணி அவர்களின் நூல்கள் விற்பனையாகின்றன. புத்தகசாலைகளிற் பெற்றுக்கொள்ளலாம்; எம்மிடம் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்:

| | |
|---|---|
| பண்டிதமணி நினைவுமலர் விசேடபிரதி, அச்சுக்கட்டு | 150 ரூபா |
| செந்தமிழ்க்களஞ்சியம் | 80 ரூபா |
| இலக்கியவழி (திருத்தப் பதிப்பு) | 30 ரூபா |
| அத்வைத சிந்தனை | 20 ரூபா |
| அன்பினைந்திணை | 12 ரூபா |

அ. பஞ்சாட்சரம்
காரியதரிசி
பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (2170)

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

கோப்பாய்த் தொகுதியில் மட்டும் (வசதிக் கட்டண) தொண்டராசிரியராகக் கடமையாற்றும் சகலரும் 17 - 09 - 89 அன்று காலை 10-30 மணியளவில் நீர்வேலியிலுள்ள அத்தியார் இந்துக் கல்லூரியில் கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொண்டர் ஆசிரியர் குழு

(2163)

## நீக்கமாறு 60 ஆவது நாள் நினைவலைகள்



### செல்வன் இராசேஸ்வரன் பிரதீப்

தாயின் மடியில்: 17 - 05 - 1989
தரணியில்: 15 - 07 - 1989

பால்மணம் மாறுப் பச்சிளம் பாலகா
செல்லின் அதிர்வினால் உன்னுயிர் பிரிந்ததோ
அடுத்தவர் கவலை அறிந்திடாக் கட்டம்
ஏவிய அதிர்வினால் உன்னுயிர் பிரிந்ததே
நித்தம் நித்தம் நெஞ்சம் வெடிக்குதே
தினமும் கணமும் உன்னுருக் கண்டதை
நினைவிலும் கனவிலும் உன்முகம் நினைப்பதை
இருப்பிலும் இறப்பிலும் மறவோம் மறவோம்.

தங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கும்:

அப்பா. அம்மா அண்ணாமார், அக்கா, பேரன்மார், பேத்திமார், அம்மம்மாச்சி, மாமன்மார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார் மற்றும் உறவினர்கள்.

குழமழலை,
முள்ளியவளை. (2168)

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

### Diploma in Data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம்: 18 - 09 - 1989 [திங்கள், புதன், வெள்ளி]

பயிற்சிக் காலம்: 3 மாதம்

சேரும் போது செலுத்த வேண்டியது ரூபா 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம்; குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்; தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்;

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்;

விண்ணப்ப முடிவுத் திகதி 17-09-1989




UNIKCO COMPUTER CENTRE
No: 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)

(C/3646)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சவூதிஅரேபியா பிரயாணம்

### SAPCO Royal Commission

இக்கொம்பனிக்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு

| | | | |
|---|---|---|---|
| (1) | H/V Drivers (கனரக சாரதிகள்) | 3 வெற்றிடங்கள் | 800 SR |
| (2) | Genarator Operators ஜெனரேட்டர் (ஒப்பரேட்டர்) | 2 " | 700 SR |
| (3) | Gardeners (தோட்டக்காரர்கள்) | 20 " | 350 SR |
| (4) | Machanics (மெக்கானிக்) | 2 " | 700 SR |
| (5) | Electrical Technicians (மின் தொழில்நுட்பவியலாளர்) | 3 " | 1200 SR |
| (6) | Equipment Machanics (Dozer, Grane) | 4 " | 700 SR |
| (7) | Agricultural Engineers (விவசாய பொறியியலாளர்) | 2 " | 1500 SR |
| (8) | Janitors (சுத்திகரிப்பாளர்) | 12 " | 350 SR |
| (9) | Welders (வெல்டர்) | 2 " | 700 SR |
| (10) | English Tppist | 2 " | 800 SR |
| (11) | Dish Washers (பாத்திரங்கள் கழுவுபவர்கள்) | 5 " | 350 SR |
| (12) | Laundryman Helper (சலவைத் தொழிற்சாலை உதவியாளர்கள்) | 3 " | 350 SR |
| (13) | Construction Lobourer (கட்டிடத் தொழிலாளர்கள்) | 5 " | 400 SR |

இவற்றிற்கு நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

## 'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
இந்திர பவனம்,
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல 1,2ஆவது,
ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/3676]

## 4 ஆவது நினைவஞ்சலி



### திருமதி வசந்தி தளையசிங்கம்

தோற்றம்: 26.04.1950
மறைவு: 15.09.1985

பிள்ளைக் கலிதீர்க்கப் பெருமகளாய் வந்துதித்தாய்
பெண்ணின் இலட்சணமாய் எம்மகளே நீ வளர்ந்தாய்
பாசமுடன் எமைக்காத்தாய் பாதிவழியில் சென்று விட்டாய்!
அக்கா என நாமழைத்தால் அன்பு மொழி பேசிடுவாய்
கண்கலங்கி நாம் நின்றால் கதிகலங்கி நீ நின்றுவாய்
சீருடன் எம்மையெல்லாம் சீராட்டிய மூத்தவளே
சிந்துகின்ற கண்ணீருக்கு விடை சொல்ல மாட்டாயோ!
மனைத்தக்க மாண்புடையவள் என்கின்ற பேரெடுத்து
இல்லறத்தில் நல்லறமாய் இனிது வாழ்ந்து
கொஞ்சிக் குலாவுவதற்கு குழந்தைகளைப் பெற்றெடுத்து
கொஞ்சாமல் அவற்றையும் கொண்டு பறந்ததென்ன
நீண்டதூரம் சென்றதென்ன எம் நினைவெல்லாம் மறந்ததென்ன
பரிதவித்து நாம் நிற்கப்பாராமல் சென்றதென்ன

ஞானசுந்தரம் குடும்பம்.

கொக்குவில் கிழக்கு.
கொக்குவில். (சி/3680)

## பொய்யாமொழி

குறள்:
இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

பொருள்:
வறுமையைப் போல் துன்பமானது எது என்று கேட்டால், வறுமையைப் போல் துன்பமானது வறுமை ஒன்றே ஆகும்.

உதயன்

இல. 292/3, நாவலர் வீதி, தொலைபேசி: 24390
யாழ்ப்பாணம் 23078
15 09 1986 தொ. பே: இலை: 88

# முல்லைத்தீவில் முன்மாதிரி

முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு அப்பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் இலவசமாக மின்சாரம் வழங்கி வருகிறார் என்ற செய்தி எல்லோரது கவனத்தையும் ஈர்க்க வல்லது; ஈர்க்க வேண்டியது.

தமது ஐஸ் தொழிற்சாலைக்காக ஜெனரேட்டர்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் ஒரு பகுதியை எவ்வித கட்டணமும் இன்றி, செலவு பணமும் இன்றி பத்து மணி நேரம் ஆஸ்பத்திரிக்கு வழங்குகிறார் அவர்.

திரு. ஞானமுத்து செபமாலை என்ற அந்தத் தொழிலதிபரின் தயாள சிந்தையை, தாராள மனதை, பரோபகாரத்தைப் பாராட்டுகிறோம். பொதுச் சேவை செய்ய விழைந்த அவரது நல்லெண்ணத்துக்கு முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர் சார்பில் நன்றி நவில்கின்றோம்.

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவைப்படும் அத்தியாவசிய நவீன இயந்திரங்களில் ஒரு தொகுதியை வைத்திய நிபுணர் ஒருவர் அன்பளிப்புச் செய்கிறார். முன்னர் இதே ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த அவர் இப்போது அமெரிக்காவில் கடமையாற்றுகிறார். அவர் இந்த இயந்திரத் தொகுதிகளை அங்கிருந்து (ஏற்றுமதிச் செலவு உட்பட சகலதையும் தாமே ஏற்று) அனுப்பி வைத்திருக்கிறார்.

அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களின் கஷ்டங்களைப் போக்க வேண்டும் என்ற மனப்பாங்கு உள்ளவர்கள் எம்மிடையே வாழ்கிறார்கள் என்பதற்கு இவர்கள் இருவரும் உதாரணமாவர். அவர்களது முன்னுதாரணத்தை மேலும் பலர் செயலளவில் பின்பற்ற வேண்டும் என் விரும்புகிறோம்.

ஒருவர் வசம் உள்ள எந்தச் சொத்திலும் ஒருபகுதியையேனும், தேவைப்படும் அடுத்தவனுக்கு வழங்க வேண்டும் என்பது தர்ம நெறி. அதுவே தானம் எனப்படும் தர்மம். தானங்களுக்கு எண்ணிக்கை வரம்பு இல்லை. ஞானதானம் முதல் கல்வித் தானம் வரை. அன்னதானம் தொடக்கம் இரத்ததானம் ஈறாக தானங்கள் எண்ணில் அடங்கா.

மனம் இருந்தால் இடமில்லை, இடமிருந்தால் மனமில்லை என்று சிலர் சொல்வதுண்டு. ஆனால் மனம் வைத்தால் எதையும் செய்ய முடியும். தானம் செய்யவேண்டும், கொடை வழங்க வேண்டும் என்ற மனம் வசதி படைத்த பலருக்கு வருவதில்லை. அவர்களில் பலரும் கருமிகளாகவே இருக்க முயல்கிறார்கள்.

வசதி இல்லாத எத்தனையோ பேர் மிக அடக்கமாக, தம்மை விளம்பரப்படுத்தாமல், பிரசாரம் செய்யாமல் தம்மால் இயன்றவரை, தம்மால் செய்யக்கூடிய தானங்களைச் செய்கிறார்கள். இதேவேளை விளம்பரத்துக்காக, புகழ் தேடுவதற்காக, சமூகத்தில் தமக்கு ஓர் அந்தஸ்தைத் தேடிக் கொள்வதற்காக தானங்கள், சேவைகள் செய்யும் 'பெரிய புள்ளி'களும் உள்ளார்கள்.

மனம் உவந்து செய்யப்படும் தானமே உண்மையான தானம். இடம் அறிந்து செய்யப்படும் தானம் சிறப்பானது; தானம் தேவைப்படும் ஒருவனைத் தவிர்த்து, தனக்கு ஏதோ ஒருவித பிரதியுபகாரம் கருதிச் செய்யப்படும் தானம் தர்மமாகாது.

இன்றைய காலச் சூழ்நிலையில், ஈழத் தமிழர்களில் அனேகர் உதவி — தானம் தேவைப்படும் நிலையிலேயே உள்ளனர். ஏழைகள், வசதி குறைந்தவர்கள் என்ற சாராரைப் போல அகதிகள், பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகுப்பினரும் பெருகி உள்ளார்கள்.

மேலும் மக்களுக்குரிய பொதுச் சேவைகள், பொது ஸ்தாபனங்கள் என்று பலவும் இயங்க முடியாத நிலையில், உரிய உபகரண மற்றும் வசதிகள் இல்லாத நிலையில் உள்ளன. அவையும் தானம் வேண்டும் வகுப்பில் சேர்க்கப்பட வேண்டியவையே!

வசதி படைத்தவர்கள், மக்களிடம் 'பணம் பண்ணுபவர்கள்' ஆகிய எல்லோரது தாராள மனங்களும், பரோபகாரமும் மேற்சொன்னவற்றின் பக்கம் திரும்ப வேண்டும். அவர்களிடம் தேவைக்கு அதிகமாக உள்ள செல்வம் ஊருணி நிறைந்தது போலப் பயன்பட வேண்டும். அவர்கள் தாமாக உவந்து உதவ வேண்டும்; வலது கை கொடுத்தது இடது கைக்குத் தெரியாமல் இடம் அறிந்து உதவ வேண்டும்.

பலவகைத் தானங்களும் — பெரும் எண்ணிக்கையில் தேவைப்படும் காலம் இது. ஆகையால் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் தம்மால் இயன்ற தானத்தைச் செய்ய மனம் கொள்ளல் அவசியம்.

## பருத்தித்துறை கொத்தணி அதிபர்களின் கூட்டம்

பருத்தித்துறை கொத்தணிக்குள் உள்ள 15 பாடசாலை அதிபர்களுக்கான விசேஷ கூட்டமொன்று பரு. மெதடிஸ்த உயர்தர கல்லூரியில் பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு. சி. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் கலந்து கொண்டார்.

பாடசாலைச் சூழல், பௌதிக வசதிகள், ஆளணிகள் இராணுவ நடவடிக்கைகளில் உயிர் இழந்த ஆசிரியர்கள், மாணவர்கள் விபரம், காயமடைந்த ஆசிரியர், மாணவர் விபரம் போன்ற சகல விபரங்களையும் கூட்டத்திற்குச் சமூகமளித்த பன்னிரண்டு அதிபர்களும் சமர்ப்பித்தனர்.

மேலும் இதுவரை இந்திய அமைதிகாக்கும் படையினரால் கைது செய்யப்பட்ட மாணவர்களின் விபரங்களைத் தனியாகத் திரட்டி யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பிக்கு அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

சமீபத்திய சம்பவங்களால் இடம் பெயர்ந்து

# வடமராட்சி கிழக்கில் தங்கியுள்ள அகதிகளுக்கு நிவாரணம்

## பத்திரங்கள் வழங்கப்பட்டன

பருத்தித்துறை, செப். 15
பருத்தித்துறை, புலோலி, வல்வெட்டித்துறை, துன்னாலை ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் நிவாரணத்துக்கான 'பெர்மிட்' பத்திரங்களை வழங்கி வருகிறார்.

குடத்தனை மேற்கு, மணற்காடு, குடத்தனை கரையூர், பொற்பதி, அம்பன், ஆழியவளை, தாளையடி, நாகர்கோவில் போன்ற கிராமங்களிலுள்ள பாடசாலைகள், தேவாலயங்கள், கோவில்கள் மற்றும் பொதுஸ்தாபனங்களில் அகதிகளாகவுள்ள பொதுமக்களுக்குரிய பெயர்ப் பட்டியலை அவ்வப்பகுதி கிராம சேவகர்கள் பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்களின் முதல் தொகுதியாக குடத்தனை மேற்கு (விளாங்காடு) கிராமசேவகர் பிரிவில் இடம் பெயர்ந்து வசித்துவரும் 150 குடும்பங்களுக்கான 'பெர்மிட்' நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இதற்குரிய நிதியை யாழ். புனர்வாழ்வுத் திணைக்களம் வழங்கியுள்ளதாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தெரிவித்தார். (த-118)

## 4 வருடங்களுக்கு முன் 'சிலிப்'பில் ஏற்றிய படகு!

காரைநகர் நீலங்காடு படகு திருத்த நிலையத்தில் நான்கு வருடங்களுக்கு 'சிலிப்'பில் ஏற்பட்ட வடதாரகை படகு இன்னமும் இறக்கப்படவில்லை.

இதனால் தற்போது சேவையில் உள்ள படகுகளை திருத்த முடியாதுள்ளது.

குமுதினி அலைஅரசி படகுகளில் கடல்நீர் புகுவதால் அவற்றை "சிலிப்"பில் ஏற்றியே திருத்தவேண்டும் என்று கூறப்படுகிறது. (இ - 111)

## 4 பல்கலைக்கழக மாணவர் உட்பட அறுவர் விடுதலை

யாழ்ப்பாணம், செப் 15
கொக்குவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்களில் 4 பல்கலைக்கழக மாணவர்களும் இரு இளம் பெண்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்பகுதியில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 15 பேர் வரையில் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். (உ-10)

## கௌரவிக்கும் விழா

யாழ்ப்பாணம், செப். 15
தாய்வானில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான சாரணத் தலைவர் பயிற்றுநர் பயிற்சியில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்ட மூவரில் ஒருவரான காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. தா. போஜனைக் கௌரவிக்கும் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும்.

மகாவை அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மாலை 2 மணிக்கு விழா ஆரம்பமாகும். (த)

## சந்திப்பு

கொழும்பு, செப். 15
"யு. எஸ். எயிட்" நிறுவனத்தின் இயக்குநர் நாயகம் திரு. பீட்டர்ஜேக்குளு ஐனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவை கடந்த புதனன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். (அ)

## இலங்கைக்கு ஜப்பான் 4 கோடி 70 லட்சம் உதவி

கொழும்பு செப். 15
வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் எழக் கூடிய பிரச்சினைகளில் இலங்கைக்கு துணைபுரியும் முறையில் ஜப்பான் 4 கோடி 70 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கும்.

இலங்கை இந்தத் தொகையைப் பயன்படுத்தி தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையானபல பொருள்களைக் கொள்வனவு செய்யுமென்று மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜப்பான் இதற்கு முன்னர் வழங்கிய கடனுதவிகள் தொடர்பாக தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் இந்த புதிய நன்கொடை உதவி பயன்படுத்தப்படும். (த)

## வானொலியில்

யாழ்ப்பாணம் செப். 15
குப்பிழான் கற்கரைக் கற்பகப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழாவின் போது ஒலிப்பதிவு செய்யப்பட்ட நிழ்ச்சியின் தொகுப்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 - 15 முதல் 6 - 45 வரை ஒலி பரப்பாகும். (இ)

# திருமலைத் துறைமுகம் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், செப். 15
திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றை வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சு ஆரம்பித்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் துறைமுக ஊழியர்களைச் சந்தித்து அவர்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்தார். துறைமுகத்தின் முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய பல ஆலோசனைகளை துறைமுக ஊழியர்கள் தெரிவித்தனர்.

கோதுமை, கோதுமை மா என்பன பெரும்பாலும் திருமலை துறைமுகத்திலேயே இறக்கப்படுவதால் இங்கு மேலதிக இறங்குதுறை ஒன்றை அமைப்பதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய திட்டமிடும்போது கொள்கலன்களை கையாள்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்த ஆவன செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (த)

## 300 மீனவக்குடும்பங்களுக்கு ரூ. 4000 நிவாரண உதவி

நெடுந்தீவில் உள்ள மீனவக் குடும்பங்கள் நிவாரண உதவியாக ரூபா 4000 பெறவுள்ளனர்.

தொழில் முயற்சிகளுக்கான இந்த நிவாரண உதவிகள் மேலும் சுமார் 340 விவசாயக் குடும்பங்களுக்கும் கிடைக்கவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இ - 111)

கொழும்புத்துறை

## சென்.யோசெப்பாடசாலையில் வடமராட்சி அகதிகள்

குருநகர், செப். 15
கரவெட்டி, கரணவாய் வடக்கு, நாச்சிமார் கோவிலடி பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் யாழ். கொழும்புத்துறை சென். யோசெப் வித்தியாலயத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த 19 குடும்பங்களிலும் 86 பேர்வரை அடங்கி உள்ளனர்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் பாசையூர் பங்குத் தந்தை பிரான்சிஸ் அடிகளார் ஆகியோர் அகதிகளது தேவைகளைச் செய்து கொடுத்தனர். (இ-51)

## சுகாதார உதவியாளர்

யாழ்ப்பாணம், செப். 15
யாழ் மாவட்டத்தில் சுகாதார உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், மொழி ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்த ஆண்கள் மட்டும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படுவோருக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா அலவன்ஸாக வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்ப முடிவு இன்று 15 ஆம் திகதி ஆகும். (த)

## மணற்காடு றோ.க பாடசாலை

கரவெட்டி செப். 15
மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆண்டு 11 வரை வகுப்புகள் நடத்துவதற்கான அனுமதியை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளார்.

வடமராட்சி கிழக்கு மணற்காடு றோ. க. த. க. பாடசாலையில் இதுவரை 10 ஆம் ஆண்டு வரையிலேயே வகுப்புகள் நடைபெற்றன. (இ - 70)

## சமய நிகழ்ச்சிகளில்

### புங்குடுதீவு சிவன் கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப் 15
புங்குடுதீவு சிவன்கோவில் மகாமேரு யந்திர கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 10 30 மணிவரை நடைபெறும்.

இக்கும்பாபிஷேகத்தை யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களும் பிரதிஷ்டா பூஷணம் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களும் நடத்தி வைப்பார்கள்.

சித்தாந்த நல்லறிஞர் வித்துவான் பொன் அ. கனகசபை ஆலயமணி ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறும். (இ)

### பம்பலப்பிட்டியில் விசேட யாகம்

கொழும்பு, செப். 15
சுவாமி ஐயப்பனுக்கு அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடத்தினர் மாதந்தோறும் நடாத்திவரும் "மாதம் ஒரு ஹோமம்" எனும் விசேட யாகம் இம்முறை பம்பலப்பிட்டி மஹா அஸ்வமேதயாக புண்ணிய பூமியில் ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸன் குருஸ்வாமி தலைமையில் நடைபெறும்.

பிரஸ்தாப ஹோமம் நாளை சனிக்கிழமை நடைபெறுமென ஸ்ரீ சாஸ்தா பீட [illegible] திரு. வி. குமரன் [illegible] தெரிவித்துள்ளார். (இ)

### பவளக்கால் அமைப்பு விழா

கன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான சித்திரத் தேருக்கான பவளக்கால் அமைப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 - 45 மணிக்கும் 9 - 00 மணிக்கு மிடையில் நடைபெறும்.

தேவஸ்தான பிரதம குருக்கள் ஆசியுரை வழங்க, திருப்பணிச்சபைத் தனாதிகாரி திரு. சோ. சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்புரையும், பிரம்மஸ்ரீ தி. கிருபாகரசர்மா நன்றியுரையும் நிகழ்த்துவார். (த)

### ஐயப்பனுக்கு ஆவணி ஓண விழா

கொழும்பு கிராண்ட்பாஸ் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு ஆவணி ஓணப் பெருநாளை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் சேவா பீடத்தினர் விசேஷபூஜைகள், அபிஷேகங்கள், ஹோமம் பஜனை என்பனவற்றை நடத்தினர்.

அன்று காலை 5.30 மணி முதல் மாலை 8.00 மணிவரை அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் சேவா பீடத்தினர் நாடத்திய விசேஷ பஜனையும் மாலை ஹோமம் என்பனவும் பீடாதிபதி சபரி பூஜா பூஷணம் ஸ்ரீ சாஸ்தா தாஸன் குருஸ்வாமி தலைமையில் நடைபெற்றன. இலங்கையில் ஐயப்பசுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்ட முதல் [illegible] (இ)

## வாசகர் திருமுகம்

### குரங்குத் தொல்லை

சாவகச்சேரிக்கு அருகாமையில் உள்ள மீசாலைக் கிராமம் மாம்பழ உற்பத்திக்குப் பெயர் போன இடம். பல்வேறு காரணங்களால் இவ்வூரில் தற்போது குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் மாம்பழ உற்பத்திக்கும் வேறு பல பயிர் வகைகளுக்கும் பெரும் அழிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வூரில் இருக்கும் அம்மன் கோவிலைச் சூழ்ந்த சோலையில் தான் குரங்குகள் பல வருடங்களுக்கு முன்பு கிறுதொகையில் இருந்தன. அவையே இப்பொழுது பெருக்கமடைந்து சுமார் இரண்டு மைல் சுற்றுவட்டத்துள்ள விளைபொருள் உற்பத்திக்கும் வீடுகளுக்கும் சேதம் விளைவித்துக் கொண்டிருக்கின்றன.

இப்பகுதி சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட இடம். நகரசபை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

— கா. வடிவேலு
மீசாலை.

### இருபாலை டச்சு றோட்

நல்லூர்க் கந்தசாமி கோவிலின் பின்பக்கத்திலிருந்து இருபாலைச் சந்திவரை செல்லும் இருபாலை டச்சு றோட்டுக்கு ராமசாமி சந்தியிலிருந்து இருபாலைச்சந்தி வரையான பகுதிகள் முதலியவை கொண்டு வந்து சேர்க்கப்பட்டுக் கூட இன்றுவரை திருத்தப்படாமல் இருக்கின்றது.

கால் மைலுக்கும் சற்றுக் கூடுதலான தூரமுடைய இந்தப் பாதையின் திருத்த வேலையைச் செய்ய ஏன்தான் தயங்குகிறார்களோ தெரியவில்லை.

இதற்கிடையில் திருத்த வேலைக்கு எனக் கொண்டுவரப்பட்ட கல் முதலிய பொருள்கள் சிதைந்தும் மறைந்தும் போகின்றன.

— ஜி. பிரபா
இருபாலை.

### முல்லைத்தீவு பொது நூலகம்

முல்லைத்தீவு பொது நூலகம் விடுமுறை நாட்களில் மூடப்படுகின்றது. இத்தினங்களிலும் நூலகத்தைத் திறந்தால் வாசகர்கள் பெரிதும் பயன் அடைவார்கள்.

அத்துடன் முல்லைத்தீவு பொதுநூலகம் விருத்தி அடையாமல் இருக்கின்றது.

விடுமுறை நாட்களில் நூலகத்தைத் திறக்கவும் நூலகத்தை விருத்தி செய்யவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வார்களா?

— யோ. ரத்தினம்
முல்லைத்தீவு.

## கண்டதும் கேட்டதும்

சிறைவாழ்வு துன்பமானதாகவும் இருக்கலாம். இன்பமானதாகவும் இருக்கலாம். இது ஒருவருடைய செல்வத்தையும் செல்வாக்கையும் பொறுத்த விஷயம்.

மெக்சிக்கோ சிறையில் இரண்டு போதைப்பொருள் 'மன்னர்கள்' நடத்திய வாழ்க்கை சிறையிலும் ஆடம்பரமாக வாழலாம் என்பதைக் காட்டுகின்றது.

இந்த இரண்டுபேரும் சிறையில் அடுத்தடுத்த அறைகளில் மெய்க்காவலர்கள், நண்பர்கள், உறவினர்கள் சகிதம் வாழ்ந்தார்கள்; பெண்களும் குழந்தைகளும் கூட அவர்களுடன் இருந்தார்கள்; ஆச்சரியப்படுகிறீர்களா?

1985இல் சிறைத்தண்டனை பெற்ற கரோ குவின்ரெரோ என்பவர் நான்கு படுக்கையறை கொண்ட மாடித் தொகுதியில் வசித்தார். சம்பூரணமான சமையல் அறை, மதுபான அறை, பிரமாண்ட முதிரைக் கட்டில், எயர் கொண்டிஷனிங், சுவருக்குச் சுவர் கம்பளம், கலர் டெலிவிஷன் செட்டுகள், வீடியோ கசெற் றெக்கோடர்கள், பில்லியாட் விளையாட்டு மேசை, அலுவலகம் - இவை எல்லாம் சிறையில் அவருக்கு இருந்தன.

பொன்சேகா என்ற மற்றவரின் ஆடம்பர வசதிகளும் குறைவானவை அல்ல. அவருடைய சிறையில் வெப்பப் பிரதேச மீன்வளர் தடாகமும் இருந்தது.

நமது நாட்டுச் சிறைகளில் இப்படி வசதிகள் இருந்தால் வெளியில் வசிப்போரைவிட சிறையில் வசிப்போரே அதிகமாக இருப்பார்கள்

— செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட ஆங்கில வகுப்பு

க.பொ.த: சா/உ, தொழில்நுட்ப, பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்குரிய

**AN ADVANCED ENGLISH COURSE**

இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை

திரு. K. Sabanayakam திரு. R. Niles

4 மாத தீவிரப்பயிற்சி

ஆரம்பம்: 16 - 09 - 1989

பாடநெறி:
1. கடிதங்கள், கட்டுரைகள் எழுதும்பயிற்சி
2. வாசித்து விளங்கிக் கொள்ளுதல்
3. பிறருடன் பிழையின்றிப் பேசுதல்

(G. C. E. O/L சித்தியடைந்தவர்கள், அதற்கு மேற்பட்ட தரம் உடையோருக்கு மட்டுமே உரியது)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் (மு. ப. 10-00—12-00)
★ கட்டணம் ரூபா 300, 00 (முழுப் பயிற்சிக்கும் 3 தவணைகளில் செலுத்தலாம்)

விபரங்களுக்கு:-

**ASTAN INSTITUTE**

101/10, Stanley Road, Jaffna.

(மக்கள் வங்கிக்கருகாமையில்) (இ/3629)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**நடராசா சரவணபவான் (பவான்)**

சாம்பல்தீவு

தாயின் மடியில்: 08 03 - 1969

தாயக மண்ணில்: 15 - 08 - 1989

மக்களை நேசித்தாய்
மண்ணை பூஜித்தாய் — ஆதலினால்
மரணத்தை யாசித்தாய்

(3338) நண்பர்கள், உறவினர்கள்,

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயகத்தில்: 21 - 03 - 1962

தியாகத்தில்: 15 - 09 - 1987

**துர்க்கைநாதன் கணேசன்**

செல்வப் புதல்வன்
சிவகரன்
(மானிப்பாய்)

Oh! My Darling Siva
You have gone to the other world
Before me.
I lived upon your light
Now for the last two years
I'm in dorkness
Even time doesn't heel my wound
Oh! darling, take me into your arms!
In vain I'm in this world

Your loving Mother!
**Mrs. K. Ganeshan,**
**& Family.**

MANIPAY. (1771)

# மாணவர் பாடசாலை செல்லவேண்டும்

## வவுனியாக் கூட்டத்தில் வலியுறுத்து

வவுனியா, செப். 15

மாணவர்கள் எவராது கைது செய்யப்பட்டுள்ளார் என்று பாடசாலை அதிபரோ, பாடசாலை அபிவிருத்திச் சங்கமோ அல்லது மாணவர் அமைப்போ சுட்டிக்காட்டினால் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள்; வீண் வதந்திகளையும் பொய்ப் பிரசாரங்களையும் செவியில் ஏற்காமல் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று தமது கல்வியைத் தொடரவேண்டும்.

வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் முக்கியஸ்தருமான திரு. வி. பராபரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் மாணவர் வருகை, கல்விநிலை, பாடசாலையின் எதிர்காலம் என்பன குறித்து ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பெரும் எண்ணிக்கையான பெற்றோர், ஆசிரியர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் இயக்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்வி அதிகாரி திரு. எஸ். அருணானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. பராபரன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் கல்வி கற்க வேண்டும். இது கட்டாய தேவை ஆகும்.

கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள எமது மாகாண அரசு கல்வி வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாணவர்களுக்காகப் போராட மாணவர் அமைப்புகள் இருக்கின்றன. இந்த அமைப்புகள் குறுகிய வட்டத்தில் நின்று செயற்படாமல் பரந்துபட்ட அளவில் செயற்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ரெலோ இயக்கத்தின் சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட திரு சுபாஷ் பேசுகையில்—

'எமது இயக்கம் ஆட்களைக் கூட்டிச் செல்வதில் ஈடுபடவில்லை. இனிமேலும் ஈடுபடப் போவதில்லை.

மாணவர்கள் தமது சமுதாயத்தின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இதனை உணர்ந்து அவர்கள் செயற்பட வேண்டும்" என்றார்.

ஈ.என்.டி.எல்.எவ் சார்பில் கலந்துகொண்ட திரு. மைக்கல்ரேு பேசும்போது,

வடக்கு - கிழக்கின் தமிழ் மக்களது பாதுகாப்பு முழுமையானதாகவும் உறுதியானதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக வீட்டிற்கு ஒருவரை அழைக்கின்றோம்.

நாம் சுயால நோக்கத்துக்காக எந்த ஒரு செயலிலும் ஈடுபடவில்லை என்றார்.

கூட்டத்தில்கலந்துகொண்ட பலரும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

மாணவர்களின் கல்விக்கு இடையூறாக இருக்கமாட்டோம் என்று இயக்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் உறுதியளித்தனர். (இ/164)

# சமுதாய சிந்தனை நோக்கில் நாடகத்துறையின் மாற்றம்

## அரங்கேற்ற விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப்: 15

நாடகத்துறை முன்பு பொழுதுபோக்குக் கலாசாரம் என்ற வகையில் அமைந்திருந்தது. ஆனால் தற்பொழுது அந்த நிலை படிப்படியாக மாறி விட்டது நாடகங்கள் சமுதாய சிந்தனைக்கு வழிகோலும் சிறப்புடையவையாக தற்போது மாறிவருகின்றன.

மஹாகவியின் "புதியதொரு வீடு" நாடகத்தின் அரங்கேற்ற விழாவில் உரையாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கலாநிதி மௌனகுரு தலைமையில் விழா நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரிய துரைராசா விழாவில் ஆசியுரை வழங்கியபோது நாடகத்துறையின் வளர்ச்சிக்குப் பல்கலைக் கழகம் சகல உதவிகளையும் செய்யும் என்று கூறினார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் தமது உரையில் நாடகத்தைத் தயாரித்து அளித்த கலாநிதி மௌனகுரு திரு. சண்முகலிங்கம் ஆகியோரின் முயற்சியைப் பாராட்டினார். (*)

## நெடுந்தீவுக்கு கோட்டக்கல்வி அதிகாரிகள்

நெடுந்தீவு செப் 15

தீவுப்பகுதி கோட்டக்கல்வி அதிகாரிகள் நாளையும் நாளை மறுதினமும் நெடுந்தீவில் உள்ள பெற்றோர்கள் கொத்தணி அதிபர் ஆசிரியர்களைச் சந்திக்க நெடுந்தீவுக்கு வருகை தருகின்றனர். (க-111)

# மாணவருக்கு ஊக்கம் அளிக்க இலங்கை வங்கி நடத்திய போட்டி

சமுதாயத்தின் வளர்ச்சியில் ஒருவங்கி பல வழிகளில் பங்கெடுக்க முடியும். இலங்கை வங்கி பலதுறை மக்களின் வாழ்விலும் ஏதாவதொரு விஷயத்தில் பங்கெடுத்து தன்னை அவர்களோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள வங்கியின் பொன்விழாவை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்த எண்ணியது.

ஒரு நாட்டின் வருங்காலம் மாணவ சமுதாயத்தின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது இந்த வருங்கால சமுதாய சிற்பிகளின் இலக்கிய ஆற்றலையும் சிந்திக்கும் திறனையும் வெளிக்கொணர்ந்து வளர்களை ஊக்குவிக்க இலங்கை வங்கி எண்ணியது.

கல்வி அமைச்சின் அனுசரணையோடு நாடளாவிய ரீதியில் ஒருகட்டுரைப் போட்டியை இலங்கை வங்கி அறிவித்தபோது யாழ் மாவட்டப் பாடசாலைகளில் இதற்கு நல்லாதரவு கிடைத்தது.

இப்போட்டியில் கலந்து கொள்ள ஆர்வம் கொண்ட மாணவர்கள் பலர் தமது பாடசாலை அதிபர்கள் மூலம் வங்கி அதிகாரிகளோடு சில கலந்துரையாடல்களுக்கு ஏற்பாடு செய்தனர். இந்தக் கலந்துரையாடல்களில் மாணவர்கள் மட்டுமல்லாமல் ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கட்டுரைப் போட்டிக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளின் தரம் எம்மை வியக்க வைத்தது.

இலங்கை வங்கியின் பொன்விழாவை ஒட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த கட்டுரைகளுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று நடைபெறுகின்றது. அதனை ஒட்டி இலங்கை வங்கி யாழ்மாவட்ட முகாமையாளர் திரு க. கணேசமூர்த்தி எழுதிய சில குறிப்புக்கள் இங்கே பிரசுரமாகின்றன.

மாவட்டரீதியில் இப்போட்டியை நடத்த எமக்குப்பெரும் ஆதரவளித்த பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பிக்கும், சிறந்த கட்டுரைகளைத் தெரிவு செய்ய எமக்கு உதவிய ஆசிரிய மணிகள் திருவாளர்கள் அருமைநாயகம், கனகசிங்கம் ஆகியோருக்கும் எமது ஆழ்ந்த நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்ட சகல மாணவர்களுக்கும் எமது பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றோம்.

### நலம் புரியும் இலங்கை வங்கி

நாட்டு வளர்ச்சி தன்னிலே நாட்டமுற்ற வங்கியாம்
காட்டும் திட்டம் பலவுண்டாம் கருத்தில்
என்றும் தங்குமாம்
சின்னஞ்சிறிய சிறுவர்க்கும் சேமிப்புகள் தொடங்கலாம்
வண்ணமான வட்டி வீதம் எண்ணம் போல வளருமாம்
குறைந்த தொகைக்கு வாங்கியே
நிறைந்த தொகைக்கு மீட்கவே
சிறந்த சேமிப்புச் சான்றிதழ்
அறிந்திடுவீர் அதன் பலன்
சிறிய தொழில் செய்வோரின் சிரமங்களைப் போக்கவே
அரிய முகவர் கடன்களாம் ஐம்பதாயிரம் தொடக்கமாம்
சொந்தத் தொழில் தொடங்குவோர்
சொந்தக் காலில் நிற்கவே
எந்தக் காலத்திற்கும் ஏற்ற சுய உதவிக் கடன்களாம்
கடன் கொடுக்கல் வாங்கலைக் கருத்திற் கொண்ட
மக்கள் நெஞ்சில்
இடம் பிடித்த ஒன்றுதான் சீ பாங் காட் திட்டமாம்
இத்தனையும் பயன்படுத்தி இன்னும்
பல உதவி பெற நாட்டின்
சொத்தெனவே ஐம்பதாண்டு திகழும்
இலங்கை வங்கியை
நித்தம் நித்தம் நாடுவீர் நிறைந்து அங்கு கூடுவீர்.

க. இலட்சுமணசர்மா
[illegible]


★ COMPUTER COURSES ★

Diploma in Basic programming & Data Processing

புதிய பிரிவுகள்:
15 — 09 — 1989 (பிரிவு - I)
16 — 09 — 1989 (Module - III)
18 — 09 — 1989 (பிரிவு - II)

நேரம்: 9.00 a.m. இல் ஆரம்பமாகும்

**I.D.P. COMPUTER CENTRE**

342, K. K. S Road, JAFFNA.

Branch: 7th Mile Post, Mallakam.

(இ-3670)



**VACANCIES**

WANTED IMMEDIATELY

For Green Memorial Hospital, Manipay.

M.B B.S Doctors and R.M.Ps
SALARY: Negotiable
APPLY To: Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay.

(C/3678)


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10-05-1901

உதிர்வு: 15 09 1988

**மாகிறேற் லூசியா பஸ்ரியாம்பிள்ளை (ரந்தினம்)**

அம்மா ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு மறைவதில்லை; நீங்கள் ஏற்றி வைத்த தீபங்கள் என்றுமே ஒளி தந்து கொண்டே இருக்கும்.

உங்களை நினைந்து துயருறும்
குடும்பத்தினர்.

(2165)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. கனகசபை சபாபதி**

(செல்லர்)

தோற்றம்: 1917- 04- 17

மறைவு: 1989- 08- 16

நீர்வைப்பதி கனகசபை மைந்தன்
சபாபதி பெயரோன் செல்லர் எனும்
மறுநாமத்தான், குலநலத்தான், தர்மத்தால் செல்வர்
தவத்தால் பெற்ற மக்கள் நால்வர்
"அப்பப்பா" என்றழைக்க பேரமக்கள் ஐவர்
இப்பாரை விட்டு ஈசனடி சேர்ந்தார்.
மக்கள் மட்டுமென்ன மாற்றாரும் அழுதிட்டார்-
மாதமொன்றானாலும் மனமோ கலங்குதப்பா.

தாய். பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"பரமபதி"
நீர்வேலிமத்தி,
நீர்வேலி.

((2087)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனதாதள் கட்சியில் உ. பி. முதலமைச்சர் திவாரி?
# புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு!

லக்னோ, செப் 14

முன்னாள் வெளியுறவு அமைச்சரும் உத்தரப்பிரகதச மாநில முதலமைச்சருமான திரு என். டி. திவாரி ஜனதா தள் கட்சியில் சேருவார் என்று புதுடில்லியில் பரவலாக அடிபடுகிறது.

இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் 'புத்திசாலியாக' திரு. திவாரி மட்டுமே விளங்குகின்றார் என்று ஜனதாதள் தலைவர் வி. பி சிங் புகழ்ந்திருந்தார். அதனைத் தொடர்ந்தே இந்த ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்திரா காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பிரதமராக வர திரு. திவாரி முயற்சிப்பார் என்று காங்கிரஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் — காங்கிரஸின் தனது எதிர்காலத்தை நிர்ணயிக்க திரு. திவாரி கடந்த திங்கட்கிழமை பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார். பேச்சு ஐந்து நிமிடங்கள் மட்டுமே நீடித்தது.

நான்கு நாள் புதுடில்லியில் காத்திருந்த பின்னரே ராஜீவைச் சந்திக்கும் வாய்ப்பு திவாரிக்கு திங்கட்கிழமையில் கிடைத்தது.

திரு. வி. பி சிங் இரகசிய தொடர்பு வைத்துள்ள காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவர் திவாரி என்று சொல்லப்படுகிறது.

இதே வேளை சஞ்சேல் விஹார் மஞ்ச் கட்சியின் முக்கிய பிரமுகரான ஜஹுப் அஹ்மத் ஜனதா தள் கட்சியில் இருந்து விலகி இந்திரா காங்கிரஸில் சேர்ந்தார்.

சஞ்சேய் காந்தியின் மனைவி மேனகா காந்திக்கு அரசியலில் வலது கரமாக விளங்கிய ஜஹுப் அஹ்மத் கட்சி மாறியது எதிர்க்கட்சி வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (எ)


## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பிரசாந்தன் ஜனார்த்தனி

இல. 17, பழையவீதி கோப்பாய் தெற்கு பரமலிங்கம் இந்திரவதனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரசாந்தன் தனது 1வது பிறந்த நாளை 15ந் திகதியும் நடேசன்-சந்திரவதனா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜனார்த்தனி தனது 4வது பிறந்த நாளை 16ந் திகதியும் கொண்டாடுகிறார்கள். இவர்களை இவர்களது அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார் பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார் குட்டுசுட்டான் சகுந்தலா சித்தி, சுவிஸ் மாமாமார், கோப்பாய் ஆசை மாமா ஆகியோர் அன்னை நாச்சிவம்மன் கருணையால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

இல. 17, பழைய வீதி,
கோப்பாய் தெற்கு
கோப்பாய். (2352)



## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் ஆவணி மீ 31ஆம் திகதி [16 - 09 - 1989] சனிக்கிழமை பகல் 8 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் **ஆனந்த பாஸ்கரன்** அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **சரோஜினிதேவி** அவர்களுக்கும் |

லண்டனில் விம்பிள்டன் (Wimbledon) ஆலயத்தில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் இவ் அழைப்பிதழை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| திரு. திருமதி சோமசுந்தரம் இல. 8 A, சிறும்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். | திரு. திருமதி சோமசுந்தரம் கிளுவளை கள பூமி, சாரைநகர். |

(2135)



## கம்பியூட்டர் கல்வி

Diploma in Computer Programming
& Data Processing
Basic Language

**4 Month**

**Weekend Classes**

Commencement: 16 — 09 89

**Fees Only Rs. 300/- per Month**

★ Lectures by members of I.D.P.M. (London)
★ Practical on I.B.M. Compatibles)
★ தமிழிலும் விளக்கங்கள்
★ பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ்
★ வெளிநாடு செல்பவர்களுக்கோர் அரிய வாய்ப்பு

**C. I. M. A, I. D. P. M I. A. B**
**SHORT HAND & TYPING**
நடைபெறுகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street.
(O.L.R தேவாலய மேற்குப்பக்கம்)
**JAFFNA.**

(இ/3682)


● தமிழ் நாடு

## காங்கிரஸ் உட்கட்சி மோதல் உச்சக் கட்டம் அடைந்தது!

சென்னை, செப் 14

தமிழ்நாடு காங்கிரஸில் உட்கட்சி மோதல் உச்சக் கட்டத்துக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள காங்கிரஸார் ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றில் தமிழ்நாடு சட்டசபை காங்கிரஸ் தலைவர் மூப்பனார் கலந்து கொள்ள இருக்கிறார்.

இது துரதிஷ்டவசமான சம்பவம் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி வர்ணித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று மூப்பனாருக்கு ஆலோசனை கூறுவீர்களா? என்று கேட்டதற்கு.

எட்டு ஆண்டுகளாக காங்கிரஸின் பொதுச் செயலாளராக மூப்பனார் இருந்திருக்கிறார். கட்சியின் சட்டவிதிகள் அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்குமே' — என்று ராமமூர்த்தி சொன்னார்.

'மூப்பனார் கோஷ்டிக்கு 'நீண்ட கயிறு' கொடுத்துள்ளேன்' — என்று ராமமூர்த்தி சொன்னார்.

'நீங்கள் கொடுத்துள்ள 'கயிறு' அவர்கள் தூக்குப் போட்டுச் சாக' போதுமா? என்று செய்தியாளர் கேட்டதற்கு.

'போதும்' — என்று ராமமூர்த்தி பதிலளித்தார். (எ)

● மணிலா அரசில் உள்ள

## செல்வந்தர் பட்டியலில் அக்யூனேவுக்கு 4ஆவது இடம்

மணிலா, செப் 14

பிலிப்பீன்ஸ் அரசில் இருக்கும் செல்வந்தர்களில் நான்காவது இடத்தை ஜனாதிபதி அக்யூனோ பெற்றார்.

அவரின் சொத்துக்களின் பெறுமதி 8 லட்சத்து 9 ஆயிரம் டாலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

முதலாவது இடத்தைப் பெற்றுள்ள ரொபர்ட்டோ வில்லானுவா ஜனாதிபதி கவுன்ஸிலின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். (எ)

## மார்கோஸின் ஆதரவாளர் மணிலாவில் தாக்குதல்!

பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மார்கோஸின் ஆதரவாளர்களான வீரர்கள் இராணுவ ஆயுதக் களஞ்சியம் ஒன்றைக் கொள்ளையடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

அன்று மார்கோஸின் 72 ஆவது பிறந்த தினத்தை அவரது ஆதரவாளர்கள் மணிலாவில் கொண்டாடினர் அது நடந்து கொண்டிருந்த சமயத்தில் தான் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மார்கோஸ் ஹவாய் தீவில் மரணப்படுக்கையில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## கம்போடிய நிலைமை

பாங்கொக், செப். 14

கம்போடியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரு கட்டமாக தாய்லாந்து பிரதமர் சற்றிச் சூன்ஹெவின் கம்போடியப் பிரதமர் ஹூன்சென் மற்றும் கெரில்லா அமைப்புக்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## குற்றச்சாட்டு

ரங்கூன், செப். 14

வெளிநாடுகளின் ராஜதந்திரிகள் பர்மாவின் (மியான்மார்) உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரசு விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இத் தகவல் வெளியானது. (எ)


## சவூதியில் உடனடி வேலைவாய்ப்பு

6 PHARMACISTS ஆங்கிலதேர்ச்சியுடன் அனுபவம் வாய்ந்தவர் SALARY — 2000 S.R.

LABOURERS SPOKEN ENGLISH தேவை, SALARY — 500 S. R.

வயது — 21 தொடக்கம் 45 வரை.

PASSPORT COPY உடன் 3 படங்கள்

EXPERIENCE CERTIFICATE

CHRACTER CERTIFICATE ஆகிய பிரதிகளுடன் முழு சுய விபரங்களையும் குறிப்பிடவும். விண்ணப்பங்களை ஆங்கில தட்டச்சில் TYPE பண்ண வேண்டும்.

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. VISA கிடைத்ததின் பின்பு பணம் அறவிடப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய or தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**T. BAHU**
Kandy Road,
(Chundukuli)
JAFFNA.

(2167)



# Jaffna English Academy

● **TOEFL** [Test of English As A Foreign Language]

WEEK - END BATCH - 8.00 to 10.00 a. m.
COMMENCEMENT - 16. 09. 89
WEEK - DAY BATCH — Mondays & Thursdays 2.00 to 4.00p.m.
COMMENCEMENT — 18. 09. 89
COURSE FEE — Rs. 350/- only.

● **ESOL**

(Intermediate English For Speakers of Other Languages)

NCE ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்கும் அதேவேளை London Certificate பெறக்கூடிய அரியவாய்ப்பு. London பரீட்சைகளை Jaffna English Academy யிலேயே எடுக்கலாம்.

(Assessment of Answerscripts And Award of Certificates From Pitmans - London)

★ Reading - Writing - Listening - Grammar Etc.
★ Graded Objectives to Proficiency ★ Worldwide Recognition
★ The content has been carefully chosen not to penalise. Candidates who have never visited the U. K.

WEEK - END BATCH — 11.30 a. m. to 1.00 p. m.
COMMENCEMENT — 16. 09. 89
WEEK - DAY BATCH — Tuesdays & Wednesdays 3.00 to 5.00 p.m.
COMMENCEMENT — 19. 09. 89 DURATION — 3 Months
COURSE FEE - FOR ESOL (Inter & Higher Inter) Rs. 850/- only.

● **SPOKEN ENGLISH** (For Adults)

WEEK - END BATCH — 10.00 to 11.30 a. m.
COMMENCEMENT — 16. 09. 89
WEEK - DAY BATCH — Mondays & Wednesdays 8.30 to 10. 30 a. m.
COMMENCEMENT — 18. 09. 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 150/- only

● **G. C. E (Advanced Level) ENGLISH 1990 AUGUST EXAMINATION**

WEEK END CLASSES — 3.00 to 5.00 p. m.
FEES Rs. 50/- Per Month

★ Shakespeare's Romeo And Juliet ★ Selected Poems
★ Bernard Shaw's Arms And the Man ★ Essays
★ George Eliot's Silas Marner ★ Letter Writing & Precis
★ Arthur Miller's Death of a Salesman ★ Comprehension Etc.
★ Modern Short Stories

**LECTURES: KANDIAH NAVARENDRAN**

● **SPOKEN ENGLISH** [Higher - Above 14 Years]

Tuesdays & Fridays — 4.00 to 5.00 p. m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only.

● **SPOKEN ENGLISH**

[Middle - Between 9 and 14 Years]

Mondays & Wednesdays — 4.00 to 5.00 p. m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only.

● **ELOCUTION** (Stages 1&2)

Thursdays — 3.30 to 4.30 p. m.
Sundays — 10.30 to 11.30 a. m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only.

● **ELOCUTION** [Stages 3 & 4]

Thursdays — 4.30 to 5.30 p. m.
Saturdays — 10.30 to 11.30 a. m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only.

● **G. C. E. (O/L) ENGLISH EXAMINATION - 1989**

Mondays & Wednesdays — 5.00 p. m. to 6.30 p. m.
FEES: Rs. 35/- per month.

● **CLASS WORK**

Years 2, 3 & 4 — Saturdays & Sundays 9.00 to 10.00 a. m. FEES: Rs. 25/- per month
Years 5, 6 & 7 — Saturdays & Sundays 8.00 to 9.00 a. m. FEES: Rs. 25/- per month
Years 8 & 9 — Saturdays & Sundays 7.00 to 8.00 a. m. FEES: Rs. 30/- per month

**LECTURES: MRS E. R. MATHER**

● **Short Hand and Typing (Pitmans London)**

**9, RAKKA LANE, CHUNDIKULI, JAFFNA.**

[C-3666]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா கோப்பியின்

வெற்றுப் பைக்கட்டுகளைச் சேகரித்து
இலக்காணும் பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்:
100g வெற்றுப் பைக்கட்டுக்கள் 10க்கு
அல்லது
50g வெற்றுப் பைக்கட்டுக்கள் 20க்கு
அல்லது
25g வெற்றுப் பைக்கட்டுக்கள் 40க்கு

ஒரு எவர்சில்வர் ரம்ளர்

# உதயன்

15 - 09 - 1989 வெள்ளிக்கிழமை

அண்ணா கோப்பி, மல்லித்தூள்,
மல்லிக் கோப்பி, மா வகைகள்,
ஜீவாகாரம், மிளகாய்த்தூள்
ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்
கொள்ளலாம்;

அண்ணா கோப்பி,
விளம்பர நிலையம்.

ஜீ. சி. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை:

## விண்ணப்பங்களை அனுப்ப கடைசித்தினம் இன்றாகும்

### எனினும் கால எல்லை நீடிக்கலாம்?

ஜீ.சி.ஈ.சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் தினம் இன்றாகும்.

ஆனாலும் இந்த முடிவு திகதி மேலும் நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான பாடசாலைகள் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைத்துவிட்டதாக அறியவருகிறது.

ஆயினும் அனேகமான மாணவர்கள் விண்ணப்பங்களில் கையெழுத்திடவில்லையாம்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இன்றும் தமது விண்ணப்பங்களைத் தபாலில் சேர்க்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## கிளிநொச்சி-வட்டக்கச்சி பாதையில் கொள்ளை!

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சிக்குச் செல்லும் வழியில் உள்ள 3 ஆம் வாய்க்கால் பாலம் என்னும் இடத்தில் இரவு நேரத்தில் அடிக்கடி கொள்ளைகள் இடம்பெறுகின்றன.

கடந்த திங்கள் முதல் இப்பகுதியில் வைத்து பல்வேறு சம்பவங்களில் பணமாக ரூபா 75 ஆயிரமும் நகையாக 25 பவுணும் அபகரிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. (இ-163)

## வாரஇறுதி ரயில்சேவை இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், செப் 15

கொழும்பு - யாழ்ப்பாணம் வாரஇறுதி ரயில் சேவை இன்று நடைபெறுமென ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரும் ரயில் நாளைக்காலை 3 மணிக்கு யாழ் ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும்.

பயணிகள் ரயிலுடன் சரக்கு ரயில் ஒன்றும் இன்று யாழ்ப்பாணம் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## ஈரோஸ் அலுவலகத்துக்கு தொலைபேசி

யாழ்ப்பாணம், செப் 15

ஈரோஸ் இயக்கத்தின் அரசியல் கட்சியான ஈழவர் ஜனநாயக முன்னணியின் அலுவலகத்துக்கு நேரடித் தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளது. (உ-10)




## அடையாளம் காணப்படாத சடலம்

யாழ்ப்பாணம், செப்: 15

யாழ் வெலிங்டன் சந்தியில் கடந்த பத்தாம் திகதி துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடந்த இளைஞரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

கொலைப்பட்ட சமயம் இந்த இளைஞன் அணிந்திருந்த இரு மோதிரங்கள் தற்போது யாழ் பொலீஸில் வைக்கப்பட்டிருக்கின்றன.

சடலம் அடையாளம் காணப்படாத பட்சத்தில் அரச செலவில் அடக்கம் செய்யப்படும். (இ-10)

## வவுனியாவில் வயோதிபர் பலி

சேமமடு, செப் 15

வவுனியா நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கடை வைத்திருந்த வயோதிபர் ஒருவர் பலியானார் எனக் கருதப்படுகிறது.

உடல் சின்னாபின்னமாகக் கிடந்ததால் செய்தி எழுதும் வரை சடலம் அடையாளம் காணப்படவில்லை. (இ-37)

## கிளிநொச்சியில்

வட்டக்கச்சி, செப். 15

கிளிநொச்சி நகரில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் அனைத்தும் நேற்று வியாழக்கிழமை போயா தினத்தை முன்னிட்டு மூடப்பட்டிருந்தன.

வர்த்தக ஊழியர்களின் விடுமுறைக்காக போயா தினங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வர்த்தக ஸ்தாபனங்கள் இனி மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-168)

## 2 மாணவரை காணவில்லை

யாழ்ப்பாணம், செப்: 15

பரந்தனில் பாடசாலை இடைவேளையின்போது இரு மாணவர்கள் காணாமற் போய்விட்டனர்.

காணாமற்போன ஒரு மாணவன் ஜெகநாதன் ஜெயகாந்தன் (வயது 10). இவருக்கு வயிற்றில் ஒப்பரேஷன் செய்த அடையாளம் உண்டு. மற்ற மாணவன் சின்னையா சிவக்குமார் (வயது 12). இவருக்கு ஒரு கையில் மூன்று விரல்கள் இல்லை.

இவர்கள் இருவர் பற்றிய தகவல் தெரிந்தோர் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு பரந்தன் குடியிருப்புத் தொண்டர் படையினர் அறிவித்துள்ளனர். கடந்த 12ஆம் திகதி முதல் இவர்கள் காணாமற் போய்விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நேற்று மின்சாரம் இல்லை

யாழ்ப்பாணம், செப்; 15

சுன்னாகம் மின் நிலையத்தில் இருந்து வழங்கப்படும் சுழற்சி முறை மின்சாரம் நேற்று வழங்கப்படவில்லை.

ஜெனரேற்றருக்குத் தேவையான ஹெவி டீசல் போதியளவு கையிருப்பில் இல்லாததன் காரணமாகவே சுழற்சி முறை மின்சாரம் தடைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## பாரசீக மொழியில் இராமாயணம்

பாரசீக மொழியில் எழுதப்பட்ட இராமாயண நூல் ஒன்று தெற்கு ... கண்டுபிடிக்கப்பட்டது.

சந்திரஜித் சைனி என்பவரிடம் இந்த நூல் இருந்தது.

## நால்வர் தடுத்துவைப்பு

கரவெட்டி, செப்: 15

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவலர்மடம் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களில் முதியவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இன்னும் நால்வர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-70)

## செட்டிகுளம் பகுதியில் ஒருவர் பலி!

வவுனியா, செப்: 15

செவ்வாய்க்கிழமை அதிகாலை செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் மரணமானார். மற்றும் ஒருவர் காயம் அடைந்தார்.

செட்டிகுளம் கங்கன்குளம் என்னுமிடத்தைச் சேர்ந்த தங்கராசா ரவி [வயது 28] என்பவரே இறந்தவர் ஆவார்.

இவருடன் சென்ற ஜீவா என்பவர் காயமடைந்தார். (இ-164)

## கமகேக்குப் பதிலாக நீல்

கொழும்பு, செப் 15

பொதுநிர்வாகத்துறை அமைச்சுச் செயலாளராக திரு. நீல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார்.

செயலாளராகக் கடமைபுரிந்துவந்த திரு. சிறில் கமகே கடந்தவாரம் ஓய்வு பெற்றது தெரிந்ததே.

புதிய செயலாளர் நீல் பெர்னாண்டோ, வெளியுறவு துணை அமைச்சுச் செயலாளராக இதுகாலவரை பணிபுரிந்துவந்தார். (அ-எ)

## ஷெல் குண்டுகள்

கரவெட்டி, செப், 15

மாவிட்டபுரம் அமைதிப்படை முகாமுக்குச் சமீபமாக கிடங்குவெட்டும்போது அமைதிப்படையினரால் இரண்டு ஷெல்கள் கண்டு எடுக்கப்பட்டன.

இவை ஸ்ரீலங்கா படையினரால் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்டவை என்று கூறப்படுகிறது. (இ-70)

## படைவிலகல் - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

...க்களின்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பெரும் அளவில் புரிந்துணர்வு ஏற்பட்டது.

அமைதிப்படை விலகல் பற்றிய இந்திய-இலங்கை உடன்பாடு இரண்டொரு தினங்களில் கைச்சாத்திடப்படும். அதன் பின்னர் போர் நிறுத்த அறிவிப்பும் வெளியாகும்.

உத்தேச இலங்கை-இந்திய நட்புறவு உடன்படிக்கை புதுடில்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அமைதிப்படை சம்பந்தமான உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் நட்புறவு ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுக்கள் இரு நாடுகளுக்கும் இடையில் ஆரம்பமாகும்.

இந்திய பொதுத்தேர்தலின் பின்னரே மார்ச்சில் சார்க் உச்சி மாநாடு நடைபெறும்.

ஆனால் அதற்கு முதல் நவம்பர் இரண்டாம் வாரம் சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு இஸ்லாமாபாத்தில் நடைபெறும்.

தென்னிலங்கை நிலைவரம்

ஆயுதந்தரித்த ஏனைய குழுக்கள் ஜே. வி. பி. மீது தொடுத்துள்ள தாக்குதல் காரணமாகத்தான் தென் பகுதியில் பல சடலங்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இதே போல ஜே. வி. பி. யால் பழிவாங்கப்பட்டவர்களின் உறவினர்களும் நண்பர்களும்கூட இத்தகைய செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். இவர்களையும் பயங்கரவாதிகளாகக் கருதும்படி பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது— என்று ரஞ்சன் கூறினார். (உ-எ)

## சந்நிதி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

...ஞர்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டனர். வந்திருந்த ஆண்களும் தேரைத் தரிசனம் செய்துவிட்டு உடனுக்குடன் திரும்புவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

திருட்டுக்கள்

ரதோற்சவத்திற்கு வந்திருந்த அடியார்களது பொருள்கள் தவறவிடப்பட்டும், கொள்ளையிடப்பட்டதுமான சம்பவங்கள் நடைபெற்றன.

கரவெட்டியைச் சேர்ந்த சிவபாக்கியம் என்பவரது இரண்டு பவுண் எடையுள்ள சங்கிலி திருடப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

அதேபோன்று ஒரு பவுண் காப்பொன்றும் திருடப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அடையாளக் கார்ட்டுகளைத் தவறவிட்ட பலரும் அவற்றை மீட்டுச் சென்றனராயினும் ... தொண்டர்களால் பணித்... (அ-51-70)

## தி. மு. க. அரசைக் கவிழ்ப்பதற்கு ஜெயலலிதா கிளர்ச்சி நடத்துவார்

சென்னை, செப்; 15

தி. மு. க. அரசைக் கவிழ்க்க மாநிலம் முழுவதிலும் கிளர்ச்சி நடத்தப்போவதாக அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றுச் சென்னையில் தெரிவித்தார்.

இந்தக்கிளர்ச்சிக் குறித்து இந்திரா காங்கிரஸ் உட்படத் தோழமைக் கட்சிகள் பலவற்றுடன் பேச்சு நடத்தப்போவதாகவும், அந்தக் கட்சிகளின் ஆதரவைக் கோரப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளையில் மதுரையில் தனது ஆதரவாளர்கள் பலரும் இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர்களும் ஊர்வலம் ஒன்றின்போது பொலிசாரால் தாக்கப்பட்டது குறித்தும் செல்வி ஜெயலலிதா கண்டனம் தெரிவித்தார். (அ-9)

## தாக்குதல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவிக்கப்பட்டு வருகிறது.

வடக்கு, கிழக்கில் இன்று அமைதி இல்லை. இந்த நிலையை உருவாக்கியவர்கள் யார்? இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுமாறு இந்திய இராணுவத்தைத் தூண்டியவர்கள் யார்?

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் தேசியப் பிரச்சினையை அரசு தீர்த்து வைக்க வேண்டும். அதில் அரசு தவறினால் நாடு பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு தயாரிக்கும் நேர்மையான எந்தவொரு திட்டத்திற்கும் ஸ. பி. ஆர். எல். எப். பூரண ஆதரவளிக்கும்—என்று அவர் சொன்னார். (உ-1)

## இறுதி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட மறுத்துவிட்டனர்.

இதனிடையில் அமைதிப்படை விலகல் தொடர்பாக கூட்டறிக்கை வெளியிடுவது சம்பந்தமான பேச்சுக்கள் தொடர்கின்றன என்று அந்த அரச அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உத்தேச கூட்டறிக்கை, உடன்படிக்கை ஆகியவற்றில் இடம்பெறும் விடயங்கள் சகல தமிழ்க் குழுக்களினதும் அபிலாஷைகளைத் தீர்த்து வைப்பதாக இருக்க வேண்டும் என்பதில் இலங்கை அரசு அதிக கவனம் செலுத்துவதாகவும்—

இதனாலேயே கூட்டறிக்கை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## யாழ்..

பளிப்புச் செய்திருந்தார்.

சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர், இராணுவ அட்டூழியங்களுக்கு ஆளாகியதால் சேவையைவிட்டு நீங்கி அமெரிக்கா சென்று பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருக்குள்ள மனப்பற்று வெளிநாடுசென்ற எல்லோருக்கும் வருமா?...... (அ-10)

## இந்திய கிரிக்கெட் வீரர்கள் மீதான தடை நீக்கப்பட்டது

இந்தியாவின் ஆறு பிரபல கிரிக்கெட் வீரர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஒரு வருட காலம் விதிக்கப்பட்டிருந்த தடையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேற்று நீக்கியது.

அண்மையில் நடைபெற்ற மேற்கிந்திய கிரிக்கெட் சுற்றுலாவின் பின்னர், கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின்றி அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் கிரிக்கெட் ஆட்டத்தில் கலந்துகொள்வதற்காக இந்த வீரர்கள் சென்றிருந்தனர். இதன் காரணமாகவே ஒரு வருடகால தடை உத்தரவு இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் வெங்சாகர், கபில்தேவ் உட்பட ஆறு வீரர்களுக்கு விதிக்கப்பட்டது.

ஏனைய கனிஷ்ட வீரர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த அபராதம் மற்றும் தண்டனைகளையும் கட்டுப்பாட்டுச் சபை நேற்று நீக்கியது. (உ-9)

முதற்கட்டப் பணம் பெறத் தவறியவர்களுக்கு

## இரண்டாயிரம் ரூபாவும் சேர்த்து வழங்கப்படும்

யாழ்ப்பாண மாவட்டத்தில், மீளக் குடியமர்தல் முதற்கட்ட நிவாரணமான ஆயிரம் ரூபாவை எடுக்கத் தவறியவர்களுக்கு, பிரஸ்தாப நிவாரணப் பணத்தைப் பெற மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மீளக்குடியமர்தல் நிவாரணமாக அரசினால் இரண்டாயிரம் ரூபாவை யாழ்ப்பாண மாவட்டத்திற்மட்டும் இரண்டு கட்டங்களாக ஆயிரம் ரூபாவாக வழங்க ஏற்பாடாகியது தெரிந்ததே.

முதலாம் கட்ட ஆயிரம் ரூபா பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பலருக்கு இன்னும் அது கிடைக்கவில்லை, பலர் அதனை உரிய காலத்தில் வங்கிகளுக்குச் சென்று பெறவில்லை.

அவர்களுக்கே மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட இருப்பதாக யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபாவை வழங்கும் வேலைகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. முதற்கட்ட நிவாரணத்தைப் பெறத் தவறியவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாவையும் இம்முறை சேர்த்து வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்த மாநாடு ஒன்றில், இதனை நடைமுறைப் படுத்துவதற்கு வங்கிகளின் ஒத்துழைப்புக் கோரப்பட்டது.

இதே வேளை மீளக் குடியமர்தல் நிவாரணத்துக்கு விண்ணப்பித்தும் ஏற்கனவே முதற்கட்ட நிவாரணம் அங்கீகரிக்கப்படாதவர்களுக்கு கடந்த மாதம் புனர்வாழ்வு அமைச்சு மேலதிகமாக ஒதுக்கிய பணம் வந்து சேர்ந்ததும் அது வழங்கப்படும் எனவும் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (அ 9)

## அன்னையின் நிலையில் முன்னேற்றமில்லை

கல்கத்தா, செப் 15

அன்னை திரேஸாவிற்கு மீண்டும் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது; மூச்சுவிடவும் அவர் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இரவு வரை அவரது உடல்நிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## கட்டை பறிச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ பிள்ளையான் காளிராசா 34 வயது)

இவர்களில் பிள்ளையான் காளிராசா ஈரோஸ் இயக்க உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் நேசதுரை பிரேமலதா (15 வயது), நாகரத்தினம் கேதீஸ்வரி (8 வயது), லிங்கம் சுதாகரன் (7 வயது), பாலசுந்தரம் பிரபாகரன் (6 வயது), குருகுலசிங்கம் சிவசங்கர் (8 வயது) ஆகிய பாடசாலைச் சிறுர்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த இராசரத்தினம் தேவகி (18 வயது) என்ற இளம் பெண் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-9-1)

## 'ஜெ' அணியில் கிருஷ்ணசாமி

சென்னை, செப்; 15

முன்னாள் அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க.வில் நேற்று சேர்ந்து கொண்டார்.

இத்தகவலை செல்வி ஜெயலலிதா செய்தியாளர்களிடம் வெளியிட்டார். (உ-எ)

## பதுளையில் ஐந்து நாள் வேலை நிறுத்தம்

கொழும்பு, செப்: 15

பதுளை மாவட்டத்தில் ஐந்து நாள் வேலை நிறுத்தத்தில் தோட்டத் தொழிலாளர் நேற்றுக் குதித்தனர்.

பதுளை மாவட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக இவ்வேலை நிறுத்தத்தை நடத்தும்படி தீவிரவாதிகள் அழைப்பு விடுத்திருக்கின்றனர். (உ-எ)

## தெற்கில் 20 பேர் பலி!

கொழும்பு, செப், 15

தென்பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் நான்கு பாதுகாப்புப் படையினர் உட்பட 20 பேர் உயிரிழந்தனர்.

கண்டி மாவட்டத்தில் பாதுகாப்புப்படையுடனான மோதலில் 7 தீவிரவாத சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர்.

நான்கு எரியுண்ட—அடையாளம் காணப்படாத—சடலங்கள் தென்பகுதியில் நேற்று கண்டெடுக்கப்பட்டன. (உ-எ)

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 328/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org